**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.ஏ.எண்.6/2025 அதன் இ.பி.எண்.46/2025**

**அதன் அ.வ.எண்.114/2013**

பார்வதி .... மனுதாரர்/1 ம் எதிர்மனுதாரர்/ 1 ம் பிரதிவாதி

/எதிர்/

பாப்பா .... எதிர்மனுதாரர்/ மனுதாரர்/வாதி

இந்த மனுவானது 05.11.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வெங்கடேசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.திலக் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் மற்றும் இரு தரப்பினர்களின் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

1). இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 106–ன் படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

2.1) இம்மனுவின் மனுதாரர் நிறைவேற்றுதல் மனுவின் 1 ம் எதிர்மனுதாரர் என்றும், மனுதாரர் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றும், அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் படி 2 வது தபசில் சொத்தினை நிறைவேற்றிட எதிர்மனுதாரர் நிறைவேற்றுகை மனு தாக்கல் செய்துள்ளார்

என்றும், மனுதாரரின் வயோதிகம் மற்றும் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தனது மகள் வீட்டில் இருந்து வருகிறார் என்றும், எனவே, மேற்படி நிறைவேற்றுகை மனு சம்மந்தமான அறிவிப்பு மனுதாரருக்கு கிடைக்கவில்லை என்றும், கடந்த 10.10.2025ம் தேதி மனுதாரருக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று 3ம் எதிர்மனுதாரர் 12.10.2025ம் தேதி தெரியப்படுத்தினார் என்றும், அதன் பின்னர் மனுதாரர் அவரது வழக்கறிஞரை சந்தித்து இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து உத்தரவிட வேண்டி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**3) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை சுருக்கம்**

3.1) மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், அசல் வழக்கானது எதிர்மனுதாரரால் 2013ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றும், மனுதாரர் மட்டுமே அசல் வழக்கிற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேல்முறையீட்டு வழக்கில் இறுதி தீர்ப்பிற்காக வாய்தா போடப்பட்ட பின்னரே எதிர்மனுதாரரால் நிறைவேற்றுகை மனு தாக்கல் செய்யப்பட்டது என்றும், மேற்படி நிறைவேற்றுகை மனு தாக்கல் செய்து, அதில் மனுதாரர் மேல்முறையீட்டு மனுவில் தாக்கல் செய்துள்ள முகவரிக்கு தபால் அனுப்பப்பட்டது என்றும், ஆனால், மேற்படி மனுதாரர் சம்மனை வேண்டுமென்றே பெறவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

3.2) அதன் பின்னர் மீண்டும் இந்த எதிர்மனுதாரரால் நீதிமன்றம் மற்றும் தபால் அலுவலகம் மூலம் மீண்டும் சம்மன் அனுப்பபட்டு, மேற்படி சம்மனை இந்த மனுதாரரும், 2, 3 எதிர்மனுதாரர்களும் வாங்க மறுத்ததால், அழைப்பாணை மறுக்கப்பட்டது என மேற்படி தபால்கள் திருப்பப்பட்டது என்றும், வேண்டுமென்றே மனுதாரர் சம்மனை வாங்க மறுத்துவிட்டு பொய்யான

காரணங்களை கூறி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், நிறைவேற்றுதல் மனுவினை இழுத்தடிக்க வேண்டுமென்றே கெட்ட எண்ணத்தில் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4) **<u>இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் கோரியவாறு நிறைவேற்றுதல் மனுவில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை திரும்ப பெற உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

5) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியத்தையோ அல்லது சான்றாவணத்தையோ முன்னிடப்படவில்லை.

6) இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. இரு தரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7) இம்மனுவின் மனுதாரர் நிறைவேற்றுகை மனுவின் 1ம் எதிர்மனுதாரர் ஆவார். இம்மனுவின் எதிர்மனுதாரர் நிறைவேற்றுகை மனுவின் மனுதாரர் ஆவார். நிறைவேற்றுகை மனுவானது மனு தபசில் சொத்தின் சுவாதீனத்தை எதிர்மனுதாரர்கள், மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) இம்மனுவின் எதிர்மனுதாரர் அ.வ.எண்.114/2013 தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் கடந்த 03.11.2017 ம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் நிறைவேற்றுகை மனுவை இம்மனுவின் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, அது இந்நீதிமன்றத்தால் நி.ம.எண்.46/2025 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது என தெரிய வருகிறது.

9). நிறைவேற்றுகை மனுவில் மனுதாரர் ஆஜராக வேண்டி அழைப்பாணை அனுப்பப்பட்டது என்றும், ஆனால் மனுதாரர் வயோதிகம் மற்றும் உடல்நிலை

சரியில்லாத காரணத்தினால் அவரது மகள் வீட்டிற்கு சென்றிருந்ததால், மேற்படி அழைப்பாணை தனக்கு கிடைக்கவில்லை என்றும், அசல் மனுவின் 3ம் எதிர்மனுதாரர் 12.10.2025ம் தேதி மேற்படி அறிவிப்பு குறித்து மனுதாரரிடம் கூறியதால் மேற்படி விபரம் தனக்கு தெரிய வந்தது என்றும், எனவே, நீதிமன்றத்தில் 10.10.2025ம் தேதியன்று மனுதாரரை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் அவர் ஆஜராகவில்லை என்பதால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

10) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு எதிராக 10.10.2025ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்வதற்கு 13.10.2025ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் தனக்கு அழைப்பாணை வரவில்லை என்று கூறும் காரணம் ஏற்றுக் கொள்ளும்படியாக இல்லை. இருந்த போதிலும், மேற்படி மனுவானது உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு தனது தரப்பு வழக்கை நிரூபிக்கும் வண்ணம் ஒரு வாய்ப்பு வழங்கும் வகையில், நீதியின் நலன் கருதியும், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இம்மனுவை செலவு தொகையுடன் அனுமதித்து உத்தரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக, இம்மனுவின் செலவு தொகையாக ரூ.3000/-ஐ மனுதாரர், எதிர்மனுதாரருக்கு 18.11.2025க்குள் செலுத்தும் பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி ஆகிவிடும் எனவும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 18.11.2025**

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை

நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் நாளாகிய இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY
order uploaded on 14.11.2025.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.11.14 17:48:07 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
திருநெல்வேலி.

1). **மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்** – இல்லை

**2). எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்** – இல்லை

MARIMUTHU R MUNIYASAMY
order uploaded on 14.11.2025.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.11.14 17:48:25 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
திருநெல்வேலி.

முமா.உ.நீ. திருநெல்வேலி
இ.ஏ.எண்.6/2025
இன்
இ.பி.எண்.46/2025
இன்
அ.வ.எண்.114/2013
நாள் 14.11.2025.
வரைவு/நேரிய உத்தரவு